2010 ஏப்ரல் 27]

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறைமூலம் எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. இருப்பினும், ஒரு சுற்றுலாப் பகுதியின் முக்கியத்துவம் மற்றும் அவ்விடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, முத்துக்குழி வயல் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், அவையில் இல்லை.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

107—

கட்டட வசதி

***35041—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, வாழ்க்கை ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், வாழ்க்கை ஊராட்சியில் சேங்கனூர் கிராமத்தில் நேரடிக் கொள்முதல் நிலையம் 12 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டு, 10—2—2010 முதல் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தாலுகாவில் இருக்கின்ற முத்துப்பேட்டை லகூன் என்ற பகுதி மிகவும் சிறப்பானதொரு பகுதி. அந்த இடத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பல்வேறு நேரங்களில் வைத்திருக்கின்றோம். அதேபோன்று பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடிய மனோரா என்ற ஒரு பகுதியும் மிகச் சிறந்ததொரு சுற்றுலாத் தலம். அதை வரும் ஆண்டு . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி உணவுத் துறை சம்பந்தமானது. அவை நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும். உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: Sorry, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதைப்போல, இந்த ஆண்டும் அரசு நெல் கொள்முதலைச் செய்து வருகிறது. இந்த ஆண்டு நெல் கொள்முதல் செய்யும்போது, விவசாயிகளுக்கு அரசு எவ்வளவு ஊக்கத் தொகை வழங்குகிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. சன்ன இரகமாக இருந்தால் 120 ரூபாயும், சாதா இரகமாக இருந்தால் 100 ரூபாயும் வழங்கப்படுகிறது. அந்த வகையிலே மானியத் தொகையாக இந்த ஆண்டு மட்டும் விவசாயிகளுக்கு 140 கோடியே, 85 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக கலைஞர் அரசு அளித்திருக்கிறது.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

2010 ஏப்ரல் 27]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெல் கொள்முதல் செய்வதற்கான மையங்கள் எந்த அடிப்படையிலே அமைக்கப்படுகின்றன? நெல் கொள்முதல் செய்யப்படுகின்ற மையங்கள் பெரும்பாலும் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளிலே மட்டும்தான் செயல்பட்டு வருகின்றன. எங்கள் மாவட்டத்திலே சிற்றாறு பாசனக் கோட்டம், தாமிரபரணி பாசனப் பகுதிகளிலே இரண்டு போகம், மூன்று போகம் நெல் விளைகின்ற இடங்கள் இருக்கின்றன. தென்காசி, கடையநல்லூர், அச்சம்புதூர், பண்பொழி, வடகரை, குற்றாலம் போன்ற பகுதிகளிலே விளைகின்ற நெல்லை விற்பதற்கு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, எங்கள் பகுதியிலே நெல் கொள்முதல் நிலையம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டெல்டா பகுதி என்பது திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், திருச்சியிலே ஒரு பகுதி, கடலூரிலே ஒரு பகுதி, கரூரிலே ஒரு பகுதி என்ற அடிப்படையில்தான் இந்த நேரடிக் கொள்முதல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. அதனுடைய தொடர்ச்சியாக இப்போது காவிரி டெல்டா பகுதி என்று சொன்னால், 1,201 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டன. காவிரி டெல்டா இல்லாத பகுதியிலே திருநெல்வேலி மாவட்டத்திலே தொடங்கப்பட்டிருக்கிறது. பிற மாவட்டங்களிலும், வேலூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், பக்கத்தில் இருக்கிற திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் இந்த நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், காவிரி டெல்டா இல்லாத பகுதிகளில் 167 கொள்முதல் நிலையங்கள் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதற்கு norms ஒன்றுமில்லை. அங்கு இருக்கிற விவசாயிகள் நேரடியாக கொள்முதல் நிலையங்களில் நெல்லைப் போடவேண்டுமென்று முடிவு செய்தால், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம்

வழங்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு இருக்கிற நுகர்வோர் வாணிபக் கழகத்தினுடைய மேலாளரை அழைத்து, இந்த ஊரிலே நீங்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கலாம் என்று சொன்னால், உடனே அதைத் திறந்துவிடுகிறார்கள். எனவே, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் எந்த இடத்திலே திறக்க வேண்டுமென்று குறிப்பு கொடுத்தால், அது உடனே நாளையதினமே திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதியிலே கிட்டத்தட்ட 6 நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அதிலே, சிவகிரி, கொடுமுடி, எழுமாத்தூர் ஆகியவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலே இயங்கி வருகின்றன. மீதி இருக்கிற நெல் கொள்முதல் மையங்களெல்லாம் தனியார் இடங்களிலே இயங்கி வருகின்றன. அவற்றிற்கு அரசாங்கத்தின் மூலமாகக் கட்டடம் கட்டுகிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையம் என்பதற்காக, முதன்முதலாக நுகர்வோர் வாணிபக் கழகத்தை தலைவர் கலைஞர் அவர்கள் 1972–லே 12 கோடி ரூபாயிலே—இந்தத் திட்டத்திற்காக அந்தக் Corporation–ஐ—துவக்கினார்கள். அது தஞ்சாவூர் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் நன்மை பெறவேண்டுமென்ற நோக்கத்திலே உருவாக்கப்பட்டிருந்தாலும்கூட, படிப்படியாக நாளடைவில் இதுபோன்ற நேரடிக் கொள்முதல் நிலையங்கள் பிற மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டன. ஆனால், இப்போது அரசின் சார்பாக, குறிப்பாக கழகத்தின் சார்பாக, காவிரி டெல்டா பகுதிகளிலே மட்டும்தான் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படுகின்றன. அதேநேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்பட ஆவன செய்யவேண்டும் என்ற கோரிக்கையை, சென்றமுறை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே நான் எடுத்து

2010 ஏப்ரல் 27]

வைத்ததன் மூலமாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் இதனை அனுமதிக்கலாம் என்று ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணத்தை ஒதுக்குவாரேயானால், அவருடைய தொகுதியில் அனைத்து இடங்களிலும் இந்த நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

பொறியியல் கல்லூரி

***84207—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் உண்ணாமலையம்மன் ஆலயத்தின்மூலம் பொறியியல் கல்லூரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை நகரில் பல பொறியியல் கல்லூரிகள் உள்ளதால், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில்மூலமாக பொறியியல் கல்லூரி தொடங்கும் எண்ணமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் அதிக அளவு deposit, நிதியிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS